**22.01.2026**

**MCOP.No.118/2024**

**எ.ம.சா.1 : ராஜ்குமார்**

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி:-**

2) முதல் விசாரணை தொடர்ச்சி இல்லை என தெரிவிக்கப்பட்டது.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

3) மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் (ம.சா.ஆ.4) ஆத்தூர் டவுன் போலீஸ் இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்து அதன் வேண்டுகோள் அடிப்படையில் தான் வாகன ஆய்வறிக்கை வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கு சட்ட பிரிவு 279,337,304(A) இ.த.ச படி போடப்பட்டுள்ளது. மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் ஓட்டுநர் உரிமம் ஒப்படைக்கப்படவில்லை என்றால் சரிதான். உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டுவது சட்டப்படி தவறு என்றால் சரிதான். ஓட்டுநர் உரிமம் ஒப்படைக்கப்படவில்லை என்பதால் மேற்படி வாகனத்தை பறிமுதல் செய்வதற்கோ செக் ரிப்போர்ட் கொடுத்தற்கோ மேற்படி விவரம் இல்லை என்று சொன்னால் செக் ரிப்போர்ட் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது.

4) செக் ரிப்போர்ட் மட்டும் தான் கொடுத்திருக்கப்பட்டுள்ளதே தவிர வாகனத்தை அவருக்கு வழங்கக்கூடாது என்பதற்கான உத்தரவு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அவ்வாறு குறிப்பிட்டு இருந்தால் அதற்குண்டான உரிய சட்ட பிரிவு குற்றப்பத்திரிக்கையில் குறிப்பிட்டிருப்பார்கள் என்றும் நாங்கள் மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் அவ்வாறு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

5) எந்த ஆய்வறிக்கையிலும் இன்சூரன்ஸ் பாலிசி கம்பெனி பெயர் மற்றும் ஊர் மற்றும் முகவரி குறிப்பிட்டு சொல்லப்படவில்லை ஆனால் குறிப்பிட்டு சொல்லப்பட வேண்டும் என்று உள்ளது. எங்களது அலுவலகத்தில் சரியாக ஆய்வு செய்யாமல் மேற்படி

வாகனத்தை ஓட்டியவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொல்லி உள்ளது தவறு என்று சொன்னால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2026.01.22 17:48:02 +0530

**Accidents Claim Tribunal,**
**Attur.**